# இந்திய அரசியலமைப்பு

**அரசியலமைப்பு என்றால் என்ன,**

ஒரு நாட்டு மக்களை ஆட்சி செய்யும் அடிப்படையான அரசியல் முறையைக் கூறுவதே ஆகும்.

**இந்திய அரசியலமைப்பு வரலாறு.**

- இந்தியர்களுக்கு அரசியலமைப்பு எழுதும் ஆற்றல் இல்லை என லார்ட் பிர்ஹன்வுட்டின் சவாலுக்கு எதிராக, நேருவின் அறிக்கை 1928ல் வெளியிடப்பட்ட்து.
- இந்தியாவுக்கென தனி அரசியலமைப்பு சட்டம் என்ற கருத்தை முன்வைத்தவர் M.N. ROY
- MAY-16-1946 காபினெட் தூதுக்குழு அரசியல் நிர்ணய சபையை குறித்து அறிக்கை வெளியிட்டது.

  காபினெட் தூதுக்குழு - சர் பெத்திக் லாரன்ஸ் (தலைவர்)

  - அலெக்ஸாண்டர்

  - கிரிப்ஸ்
- 9th DEC 1946 Dr.சச்சிதான்ந்த சின்ஹா இந்திய அரசியல் நிர்ணய சபையின் (முதல் கூட்டம்) தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டார்.
- 11th DEC 1946 Dr.ராஜேந்திர பிரசாத் இந்திய அரசியல் நிர்ணய சபையின் நிரந்தர தலைவராக நியமிக்கப்பட்டார்.
- அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்கள் 299 பேர்.
- அரசியலமைப்புக்கான குறிக்கோள் தீர்மானம் நேருவால் 22nd JAN 1947-ல் முன்மொழியப்பட்டது.
- சட்ட வரைவுக்குழு ஒன்று 29th AUG 1947-ல் நியமிக்கப்பட்டது. சட்ட வரைவுக்குழு 7 உறுப்பினர்களை கொண்டது, இதன் தலைவர் பி.ஆர். அம்பேத்கர்.
- இந்திய அரசியலமைப்பு உருவாக்க எடுத்துக் கொள்ளப்பட்ட கால அவகாசம் 2 வருடம் 11 மாதம் 18 நாட்கள்.

tnpscexams.weebly.com

- இந்திய அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்தவர் பி.ஆர். அம்பேத்கர்.
- இந்திய அரசமைப்புச் சட்டத்தை தன் கைப்பட முழுவதுமாக எழுதியவர் பிரேம் பிஹாரி நரேன் சக்ஸேனா, இதனை எழுதி முடிக்க 6 மாத காலம் ஆனது.
- அரசமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் 26th NOV 1949, அரசமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாளே இந்திய சட்ட தினம்.
- அரசமைப்புச் சட்டம் நடைமுறை படுத்தப்பட்டது 26th JAN 1950, அரசமைப்புச் சட்டம் நடைமுறை படுத்தப்பட்ட நாளே இந்திய குடியரசு தினம்.
- உலகின் மிகப்பெரிய எழுதப்பட்ட அரசியலமைப்பு இந்திய அரசமைப்பு, இது 12 அட்டவனை 22 பகுதிகள் 395 ஷரத்துகள் கொண்டது.

**இந்திய அரசமைப்பின் மூலங்கள்**

| மூலங்கள் | கடைபிடிக்கப்பட்ட விதிகள் |
|---|---|
| 1935 இந்திய அரசாங்க சட்டம் | ஆட்சி அமைப்பின் அடிப்படை, அவசர நிலை பிரகடனம். |
| அயர்லாந்து | அரச நெறிமுறைக் கோட்பாடு,<br>ராஜ்யசபா நியமன MP க்கள். |
| ரஸ்யா | அடிப்படை கடமைகள்,<br>5 ஆண்டு திட்டங்கள் |
| இங்கிலாந்து | பாராளுமன்ற ஆட்சிமுறை,<br>சட்டத்தின் ஆட்சி, சட்டம் இயற்றும் முறை. |
| தென் ஆப்பிரிக்கா | சட்டத்திருத்த முறை |
| அமெரிக்கா | அடிப்படை உரிமைகள், முகப்புரை |
| கனடா | கூட்டாட்சி முறை |
| ஆஸ்திரேலியா | அதிகார பொதுப் பட்டியல் |
| ஜெர்மன் | அவசர நிலை பிரகடனத்தின் போது அடிப்படை உரிமைகளை நீக்குவது |

tnpscexams.weebly.com

## அட்டவணைகள்.

- அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது 8 அட்டவணைகளைக் கொண்டிருந்தது.
- முதல் திருத்தம் 1951-ல் 9வது அட்டவணை சேர்க்கப்பட்டது.
- 52வது திருத்தத்தின்(1985) மூலம் 10வது அட்டவணை சேர்க்கப்பட்டது.
- 73 & 74வது திருத்தத்தின்(1992) மூலம் 10வது அட்டவணைகள் சேர்க்கப்பட்டது.

**அட்டவணை-1:** இந்திய எல்லைகளைப் பற்றியது.

- 29 மாநிலங்கள், 6 யூனியன் பிரதேசங்கள், 1 தேசிய தலைநகர் உள்ளது.

**அட்டவணை-2:** சம்பளம் மற்றும் இதர படிகள்

- குடியரசு தலைவர், ஆளுநர், உச்ச, உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியங்கள்.

**அட்டவணை-3:** பதவிப்பிரமாணம், உறுதிமொழிகள்.

**அட்டவணை-4:**மாநிலங்களவையின் பிரிநிதித்துவம்.

- மாநிலங்களவையில் உறுப்பினர்கள் இட ஒதுக்கீடு தொடர்பானது.

**அட்டவணை-5:** SC & ST மக்கள் வாழும் பகுதிகளின் கட்டுப்பாடும் நிர்வாகமும்.

**அட்டவணை-6:** அஸ்ஸாம், மேகாலயா, மிசோரம், திரிபுரா ஆகிய பகுதிகளில் உள்ள பழங்குடியின்ர் நிர்வாகம்.

- அட்டவணை- 5&6 எளிமையான அதிக வாக்குகள் மூலம் நாடாளுமன்றத்தில் திருத்தலாம்.

**அட்டவணை-7:** மத்திய மாநில அதிகார பகிர்வு பட்டியல்.

- மத்திய பட்டியலில் 100 துறைகள் உள்ளது, இவற்றில் சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டது மத்திய அரசு.

tnpscexams.weebly.com

- மாநில பட்டியலில் 61 துறைகள் உள்ளது, இவற்றில் சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டது மாநில அரசு.
- பொது பட்டியலில் 52 துறைகள் உள்ளது, இவற்றில் சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டது மாநில அரசும் மத்திய அரசும்.

**அட்டவணை-8:** பிராந்திய மொழிகள்.

- அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் 22 ((முன்பு -18).
- 92வது திருத்தம்(2003) ல் 4 மொழிகள் சேர்க்கப்பட்ட்து
  ( 19-மைதிலி, 20-போடோ, 21-சாந்தலி, 22-டோக்ரி)

**அட்டவணை-9:** நீதிமன்ற மேலாய்விலிருந்து பாதுகாப்பு பெற்றவை.

- இந்த அட்டவணையில் சேர்கப்பட்ட முதல் சட்டம் ஜமீந்தாரி ஒழிப்பு.
- ❖ தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு 69% இட ஒதுக்கீட்டு மசோதா 85வது திருத்தம் 1993ல் நிறைவேற்றப்பட்டு இந்த அட்டவணையில் சேர்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-10:** கட்சித்தாவல் தடை சட்டம்.

- 52வது திருத்தம் 1985 நிறைவேற்றப்பட்டது

**அட்டவணை-11:** பஞ்சாயத்து ராஜ்

- 73வது திருத்தம் 1992
- இந்த அமைப்பிற்கு 29 துறைகளில் அதிகாரம் உள்ளது.

**அட்டவணை-12:** நகர்பாலிகா

- 74வது திருத்தம் 1992
- இந்த அமைப்பிற்கு 18 துறைகளில் அதிகாரம் உள்ளது.

**பகுதிகள்.**

**பகுதி 1** (உட்பிரிவு 1-4) இந்திய யூனியன் பற்றியது. அதாவது மாநில அமைப்பு. மாநில எல்லை வரையறை போன்றவை.

**பகுதி 2** (உட்பிரிவு 5-11) இந்திய குடியுரிமை பற்றியது.

**பகுதி 3** (உட்பிரிவு 12-35) அடிப்படை உரிமைகள்/ அது மறுக்கப்படும் போது அதற்கான தீர்வுகள்.

**பகுதி 4** (உட்பிரிவு 36-51) அரசு கொள்கைக்கான வழி காட்டும் நெறிகள்.

**பகுதி 4A** ( உட்பிரிவு 51 A) அடிப்படை கடமைகள்.

**பகுதி 5** (உட்பிரிவு 52- 151) மத்திய அரசமைப்பு அதாவது குடியரசு தலைவர், துணைக் குடியரசு தலைவர், நடுவண் அமைச்சரவை, பாராளுமன்றம் மற்றும் அதன் அமைப்பு, உச்ச நீதிமன்றம் மற்றும் அதன் அமைப்பு.

**பகுதி 6** (உட்பிரிவு 152-237) மாநில அரசமைப்பு, கவர்னர், மாநில அமைச்சரவை. மாநில சட்டமன்றம் / சட்ட மேலவை அதன் அமைப்பு உயர் நீதி மன்றம் அதன் அமைப்பு.

**பகுதி 7** (உட்பிரிவு 238) அரசமைப்பு சட்டம் முதல் பட்டியலில் உள்ள மாநிலங்கள் பற்றியது- இந்தப் பிரிவு இப்போது நீக்கப் பட்டுள்ளது.

**பகுதி 8** (உட்பிரிவு 239 -242) ஒன்றியப் பகுதிகள் குறித்து.

**பகுதி 9** ( உட்பிரிவு 243) உள்ளாட்சி நிர்வாகம் இந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பகுதி 9A** ( உட்பிரிவு 243P-243Z,243ZA-243ZG) நகராட்சி நிர்வாகம் இந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பகுதி 10** உட்பிரிவு 244) பட்டியல் சாதிகள்/ பழங்குடியினர்/ ஆங்கிலோ இந்தியர் ஆகியோர் குறித்து.

tnpscexams.weebly.com

**பகுதி 11** (உட்பிரிவு 245-263) மத்திய மாநில அரசு உறவு, மாநிலங்ளுக்கிடையேயான உறவு.

**பகுதி 12** (உட்பிரிவு 264-300) அரசின் நிதி குறித்த உட்பிரிவுகள் நிதி / நிதியினைக் கையாளும் நெறிகள்.

**பகுதி 13** ( உட்பிரிவு 301- 307) இந்திய நாட்டில் வணிகம் செய்யும் நடைமுறைக்கான உட்பிரிவுகள்.

**பகுதி 14** ( உட்பிரிவு 308-323) அரசுப் பணிகள்

**பகுதி 14A** (உட்பிரிவு 323ஏ மற்றும் 323 பி) மத்திய தீர்ப்பாயங்கள்.

**பகுதி 15** (உட்பிரிவு 324-329) தேர்தல்கள், தேர்தல் ஆணையம்.

**பகுதி 16** (உட்பிரிவு 330-342) - பகுதிவாரி பெரும்பாண்மை சாதிகளுக்கான உரிமைகள் பற்றி.

**பகுதி 17** (உட்பிரிவு 343-351) அலுவல் மொழி, வட்டார மொழி, நீதி மன்றங்களில் மொழி.

**பகுதி 18** (உட்பிரிவு 352-360) அவசர நிலைக்கானது (எமெர்ஜென்சி)

**பகுதி 19** (உட்பிரிவு 361-367) இதர (இதில் குடியரசு தலைவர், கவர்னர் இந்தப் பதவிக்கான சட்ட சிறப்பு பாதுகாப்பு மற்றும் சில)

**பகுதி 20** (உட்பிரிவு 368) இந்திய் அரசமைப்புச் சட்டம் திருத்தம் அதற்கான நடைமுறை.

**பகுதி 21** (உட்பிரிவு 369-392) தற்காலிக, இடைநிலை மற்றும் சிறப்பு ஒதுக்கீடுகள்

**பகுதி 22** (உட்பிரிவு 392-395) குறுகிய காலப் பட்டங்கள் அளித்தல் & நீக்குதல், இந்தி அதிகாரப்பூர்வ உரை.

tnpscexams.weebly.com

## முகப்புரை

- முகப்புரை என்பது, இயற்றப்பட்ட சட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் பகுதி ஆகும்.
- இது நேரு வால் வடிவமைக்கப்பட்டது.
- பெருபாரி வழக்கில்(1960) "முகப்புரையானது அரசியலமைப்பின் ஒரு பகுதி ஆகாது என கூறப்பட்டது".
- கேசவான்ந்தபாரதி வழக்கில்(1973) உச்ச நீதிமன்றம் "முகப்புரையானது அரசியலமைப்பின் ஒரு பகுதியே ஆகும்" என கூறியது.

  ( மின்ர்வா மில்ஸ் வழக்கு - 1980)

- முகப்புரை 1 முறை மட்டும் திருத்தப்பட்டுள்ளது.
- 1976ம் ஆண்டில் 42வது அரசியல் திருத்தம் செய்யப்பட்டது. இத்திருத்தம் முகப்புரையில் 3 சொற்களை புகுத்தி உள்ளது. ஆதாவது சமதர்மநெறி, சமய சார்பின்மை, மற்றும் ஒருமைப்பாடு.

<u>கூறியது</u>

- ❖ முகப்புரை என்பது அரசியலமைப்பின் ஜாதகம் → K.M.முன்சி
- ❖ முகப்புரை என்பது அரசியலமைப்பின் ஆன்மா → தக்கூர் தாஸ்
- ❖ முகப்புரை என்பது அரசியலமைப்பின் சாவி → பர்கர்

**பகுதி 1** (உட்பிரிவு 1-4) இந்திய யூனியன் பற்றியது

ஷரத்து-1: இந்தியா என்பது மாநிலங்களின் கூட்டாட்சி

ஷரத்து-2: புதிய மாநிலங்களை உருவாக்குவது (புதிய பகுதியை).

ஷரத்து-3: புதிய மாநிலங்களை உருவாக்குவது, பழைய மாநிலங்களை சுருக்குவது, எல்லைகளை மாற்றுவது, மாநிலங்களின் பெயர் மாற்றுவது.

- ❖ First name change → UP
- ❖ Last name change → Orissa to Odissa.

tnpscexams.weebly.com

மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்டது:

- மாநிலங்களை சீரமைப்பதற்க்கு 1947-ல் S.K.DHAR committee அமைக்கப்பட்டது
- 1948-ல் JVP Committee அமைக்கப்பட்டது.
- 1952-ல் பொட்டி ஸ்ரீராமலு ஆந்திரா பிரிக்க வலியுறுத்தி உயிரிழந்தார்.
- 1953-ல் மொழிவாரி மாநிலமாக, முதன்முதலாக ஆந்திரா பிரிக்கப்பட்ட்து.
- 1953-ல் மொழிவாரி மாநிலம் அமைக்க Fazir Ali Commission அமைக்கப்பட்டது, இந்த கமிஷன் இந்தியவை 16 பிரிக்கலாம் என கூரியது.
- 7வது சட்ட திருத்தம் 1956-ல் Fazir Ali Commission பரிந்துரை படி 14 மாநிலங்கள், 6 யூனியன் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டது.

மாநிலங்கள்

- ❖ 22-வது மாநிலம் சிக்கிம்
- ❖ 23-வது " மிசோரம்
- ❖ 24-வது " அருணாசலப்பிரதேசம்
- ❖ 25-வது " கோவா
- ❖ 26-வது " சட்டீஸ்கர்
- ❖ 27-வது " உத்திராஞ்சல்
- ❖ 28-வது " ஜார்கண்ட்
- ❖ 29-வது " தெலுங்கானா ( ஸ்ரீ கிருஷ்னா Committee )

ஷரத்து-4: ஷரத்து-2 & 3 செய்வதற்கு சட்டத்திருத்தம் தேவையில்லை, பாராளுமன்ற சட்டம் போதுமானது.

**பகுதி 2** (உட்பிரிவு 5-11) இந்திய குடியுரிமை பற்றியது.

- குடியுரிமை சட்டம் 1955-ல் இயற்றப்பட்டது, மேலும் 1986,1992,2003 & 2005-ல் திருத்தப்பட்டது.
- இந்தியா வில் குடியுரிமை பெற 5 வழிகளும், இழக்க 3 வழிகளும் உள்ளது

ஷரத்து-5: அரசியலமைப்பின் தொடக்க கால குடியுரிமை.

ஷரத்து-6: பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு வந்தவர்களின் குடியுரிமை.

ஷரத்து-7: பாகிஸ்தானுக்கு இடம் பெயர்ந்தோரின் குடியுரிமை.

tnpscexams.weebly.com

ஷரத்து-8: இந்தியாவிற்கு வெளியே வசித்து வரும் இந்திய வம்சாவழியினரின் குடியுரிமை.

ஷரத்து-11: குடியுரிமை தொடர்பான சட்டமியற்றும் உரிமை பாரளுமன்றத்திற்கு உண்டு.

**பகுதி 3** (உட்பிரிவு 12-35) அடிப்படை உரிமைகள்/ அது மறுக்கப்படும் போது அதற்கான தீர்வுகள்.

- அடிப்படை உரிமைகள் வகைப்பாடு

    1) சமத்துவ உரிமை (ஷரத்து 14-18)
    2) சுதந்திர உரிமை (ஷரத்து 19-22)
    3) சுரண்டலுக்கெதிரான உரிமை (ஷரத்து 23-24)
    4) சமய சுதந்திர உரிமை (ஷரத்து 25-28)
    5) கலாச்சார மற்றும் கல்வியியல் உரிமை (ஷரத்து 29-30)
    6) அரசியலமைப்பு தீர்வழிகள் பெற உரிமை (ஷரத்து 32-35)

- மேற்படி அடிப்படை உரிமைகளில் சொத்துரிமை நீக்கப்பட்டுள்ளது ( 44வது திருத்தம் 1978). அதனால் ஷரத்து-19ம் ஷரத்து 31ம் அரசியல் அமைப்பிலிருந்து எடுக்கப்பட்டு ஷரத்து 300A யில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஷரத்து-12: அரசு என்பதன் பொருள்.

ஷரத்து-13: சட்டம் என்பதன் பொருள்.

ஷரத்து-14: சட்டத்தின் முன் சமத்துவம், சட்டங்களின் மூலம் சம பாதுகாப்பு.

ஷரத்து-15: சாதி, சமய, இன, பால், பிறப்பிட வேறுபாடுகளினால் பாரபட்சம் காட்டாமை.

ஷரத்து-16: சாதி, சமய, இன, பால், வம்சாவழி, பிறப்பிட, இருப்பிட வேறுபாடுகளினால் அரசுப்பதவியை அல்லது வேலையைப் பெறத் தகுதி இல்லை என்று எந்தக் குடிமகனுக்கும் பாரபட்சம் காட்டக்கூடது.

- 1992ம் ஆண்டு NOV 16ல் மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பிந்தங்கிய பிரிவினருக்கு 27% இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டது.

ஷரத்து-17: தீண்டாமை ஒழிப்பு.

- தீண்டாமை ஒழிப்புச் சட்டம் 1955
- 1976-ல் சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் என மாற்றப்பட்டது.
- பழங்குடியினர் & அட்டவணை வகுப்பினருக்கு எதிரான அநீதிகள் எதிர்ப்பு சட்டம் 1989.

ஷரத்து-18: பட்டங்கள் ஒழிப்பு சட்டம்.

- பாரத ரத்னா, பத்ம ஸ்ரீ விருதுகளை உருவாக்கிய ஷரத்து.

ஷரத்து-19: சுதந்திர உரிமை.

ஷரத்து-19 (1):

- பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம்.
- ஆயுதங்கள் இல்லாமல் அமைதியாகக் கூட்டம் கூடுவதற்குச் சுதந்திரம்.
- சங்கங்கள் அமைப்பதற்குச் சுதந்திரம்.
- இந்திய ஆட்சிப்பகுதிக்குள் எல்லா இடங்களுக்கும் போய் வருவதற்கான சுதந்திரம்.
- இந்தியாவின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் வசிக்கவும் குடியிருப்பதற்கும் சுதந்திரம்.
- எந்தத் தொழிலையோ, வியாபாரத்தையோ மேற்கொள்வதற்கான சுதந்திரம்.

ஷரத்து-20: குற்றங்களுக்குத் தண்டனையளிப்பது குறித்த பாதுகாப்பு.

ஷரத்து-21: உயிருக்கும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு.

- ஷரத்து-20 & 21 யும் அவசரநிலையின் போதும்கூட பிரிவு 359ந் படி இதனை நிறுத்திவைக்க முடியாது என்று 42வது திருத்தம் 1976 கூறுகிறது

  { 42வது திருத்தம் = குட்டி அரசியலமைப்பு }.

tnpscexams.weebly.com

ஷரத்து-21(A): அடிப்படை கல்வி உரிமை

- 86வது திருத்தம் 2002.

ஷரத்து-22: கைது செய்வதற்கும், காவலில் வைப்பதற்கும் எதிரான பாதுகாப்பு.

ஷரத்து-22(1): தடுப்புக்காவல் சட்டம்.

- ஆலோசனைக்குழு போதுமான காரணம் இருப்பதாகக் கூறினால் ஒழிய எந்தச் சட்டத்தின் படியும் தடுப்புக்காவல் 3 மாதங்களுக்கு மேல் போக அனுமதிக்கக்கூடாது. அத்துடன், தடுப்புக்காவலுக்கு வகைசெய்யும் எந்தச் சட்டமானாலும், அதிகபட்சம் எவ்வளவு காலத்திற்குத் தடுப்புக்காவலில் வைக்கலாம் என்பதையும் கண்டிப்பாகக் கூறியாக வேண்டும்.

ஷரத்து-23: சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு.

ஷரத்து-24: குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு.

ஷரத்து-25: குடிமக்கள், எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி எந்தச் சமயத்தையும் ஏற்கவும், பின்பற்றவும் பரப்பவும் அனைவருக்கும் சுதந்திரம் உண்டு.

ஷரத்து-26: எல்லா சமயத்தவருக்கும், சமய மற்றும் அறநிலைய அமைப்புகளை ஏற்படுத்திப் பராமரிக்க உரிமை உண்டு.

ஷரத்து-27: எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தின் வளர்ச்சிக்காகவும், பராமரிப்பிற்காகவும் ஆகும் செலவுகளுக்காக வரி செலுத்துமாறு எந்த ஒரு நபரையும் கட்டாயபடுத்த முடியாது.

ஷரத்து-28: முற்றிலும் அரசாங்க நிதியில் செயல்படும் கல்வி நிறுவனங்களில் சமய போதனை கூதாது

ஷரத்து-29: ஒவ்வொருவருக்கும் தங்களது மொழி பண்பாடு ஆகியவற்றை

காத்துக்கொள்வதற்கு உரிமை உண்டு.

ஷரத்து-30: சிறுபான்மையினர் அனைவரும் கல்வி நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிப்பதற்கு உரிமையுண்டு.

ஷரத்து-32: நீதிப்பேராணை

1. நீதிப்பேராணை வேண்டும் மனுவை உயர் நீதிமன்றதில் தாக்கல் செய்யாமல், நேரடியாக உச்ச நீதிமன்றதிலும் தாக்கல் செய்யலாம்.
2. அடிப்படை உரிமைகள் மீறப்படும் பொழுது, உச்ச நீதிமன்றம் நீதிப்பேராணை வெளியிட அதிகாரம் உள்ளது.

- 5 நீதிப்பேராணை உள்ளது
    1. ஆட்கொணர்வு நீதிப்பேராணை
    2. செயலுறுத்தும் நீதிப்பேராணை
    3. தடையுறுத்தும் நீதிப்பேராணை
    4. நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை
    5. தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை

{ அம்பேத்கர் இதனை தனி மனிதனின் இருதயமும் ஆன்மாவும் போன்றது என்று கூறியுள்ளார்}

ஷரத்து-51(A): அடிப்படை கடமைகள்

- 42வது திருத்தம் 1976-ல் இனைக்கப்பட்டது.
- இது இந்திய அரசியல் சாசனதின் "மேக்ன கார்டா" என்ப்படுகிறது.

<u>முக்கிய ஷரத்துக்கள்:</u>

ஷரத்து-25 → சமய உரிமை
ஷரத்து-36-51 → அரச நெறிமுறைக் கோட்பாடுகள்
ஷரத்து-40 → கிராம பஞ்சாயத்து அமைப்பு.
ஷரத்து-44 → பொது சிவில் சட்டம்
ஷரத்து-45 → இளம் சிறார் பாதுகாப்பு
ஷரத்து-48 → பசுவதைத் தடுப்பு
ஷரத்து-61 → குடியரசு தலைவர் நீக்கம்
ஷரத்து-79 → பாராளுமன்ற வரையறை
ஷரத்து-108 → பாராளுமன்ற கூட்டுக்கூட்டம்

tnpscexams.weebly.com

ஷரத்து-110 → பண மசோதா

ஷரத்து-112 → ஆண்டு நிதிநிலைஅறிக்கை

ஷரத்து-263 → மாநிலங்களுக்கிடையிலான குழுமம்

ஷரத்து-280 → நிதி ஆணையம்

ஷரத்து-300(A) → சொத்துரிமை

ஷரத்து-343 → ஹிந்தி இந்தியாவின் ஆட்சிமொழி

ஷரத்து-352 → தேசிய அவசரநிலை பிரகடனம்

ஷரத்து-356 → மாநில அவசரநிலை பிரகடனம்

ஷரத்து-360 → நிதிநிலை அவசரநிலை பிரகடனம்

ஷரத்து-368 → அரசியல் சட்ட திருத்தம்

ஷரத்து-370 → ஜம்மு காஷ்மீருக்குத் தனி அதிகாரம்.

முக்கிய திருத்தங்கள்

1வது (1951) → 9-வது அட்டவணை இணைப்பு

7வது (1956) → மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கம்

14வது (1962) → பாண்டி இந்தியாவுடன் இணைப்பு

24வது (1971) → பாராளுமன்றம் அரசமைப்பின் எந்த பகுதியையும் திருத்தலாம்

61வது (1989) → வாக்களிக்கும் வயது 21-ல் இருந்து 18 ஆக குறைப்பு

69வது (1991) → டெல்லி இந்தியாவின் தலைநகர் பகுதி ஆனது

82வது (2000) → பதவி உயர்வில் தாழ்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு

84வது (2001) → லோக்சபா சீட் எண்ணிக்கை 2026 வரை நிரந்திரம்

86வது (2002) → கல்வி அடிப்படை உரிமையானது

95வது (2010) → SC & ST இடஒதுக்கீடு நீடிப்பு

- இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் பற்றி கூறுவது - ஷரத்து 38
- இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் காபினெட் என்ற வார்த்தை உள்ளது - ஷரத்து 352

tnpscexams.weebly.com

குடியரசு தலைவர்

- 35 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும்
- மாதச்சம்பளம் - ரூ.1,50,000

ஷரத்து-52 → இந்தியாவிற்கு ஒரு குடியரசு தலைவர் இருக்கவேண்டும் என்றும் அவரது அதிகாரம் செயல்படுத்துவது பற்றியும் கூறுகிறது

ஷரத்து-54 → குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்கும் முறை பற்றி கூறுகிறது

ஷரத்து-61 → குடியரசு தலைவர் மீது பழிச்சாற்றுவது

- குடியரசு தலைவர் மீதான குற்ற விசாரனைக்கான முன்னறிவிப்பு கால அவகாசம் 14 நாட்கள்.

ஷரத்து-76 → இந்திய தலைமை வழக்கறிகஞரை நியமிக்கும் அதிகாரம்

ஷரத்து-86 → மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களையும், மக்களவைக்கு 2 ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களையும் நியமிக்கும் அதிகாரம்

ஷரத்து-108 → இரு அவைகளின் கூட்டு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யும் அதிகாரம்.

ஷரத்து-109 → குடியரசு தலைவரின் அதிகாரங்கள் பற்றி கூருகிறது

ஷரத்து-111 → பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதா குறித்து தனது இசைவினை அளிக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்.

மாநிலங்களவை (ராஜ்ய சபா)

- இதன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 250க்கு மிகாமல் இருக்க வேண்டும், இதில் 238 பேர் மாநிலங்களில் இருந்தும், நேரடி ஆட்சி பகுதிகளில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவர். 12 பேர் குடியரசு தலைவர் கலை, இலக்கியம், அறிவியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்குபவர்களை நியமிப்பார்.
- குறைந்தபட்ச வயது வரம்பு 30
- பதவிக்காலம் 6 வருடங்கள், 3-ல் ஒரு பங்கு உறுப்பினர்கள் 2 வருடங்களுக்கு ஒரு முறை பதவி இழப்பர்.
- இதற்கான தேர்தல் மறைமுக தேர்தல் எனப்படும்.
- மாநிலங்களவையின் முதல் கூட்டம் 13th MAY 1952 அன்று நடந்தது.
- இதன் தலைவர் துணைக்குடியரசு தலைவர்.

மக்களவை (லோக் சபா)

- இதன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 552க்கு மிகாமல் இருக்க வேண்டும், இதில் 530 பேர் மாநிலங்களில் இருந்தும், 20 பேர் நேரடி ஆட்சி பகுதிகளில் இருந்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். 2 ஆங்கிலோ இந்தியர் களை குடியரசு தலைவர் நியமிப்பார்.
- தற்போது 543+2= 545 பேர் உள்ளனர்.
- குறைந்தபட்ச வயது வரம்பு 25.
- பதவிக்காலம் 5 வருடங்கள்.

- சட்டமியற்ற மசோதா நாடாளுமன்ற இரு அவைகளின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

- நிதி மசோதாவைப் பொறுத்தவரை மக்கள் அவையின் ஒப்புதலே முடிவானது.

- நிதி மசோதாக்கள் மாநில அவையினால் 14 நாட்கள் மட்டுமே தாமதப்படுத்தலாம்.

- அரசியலமைப்பின்படி நாடாளுமன்றம் ஆண்டில் குறைந்தது 2 முறை கூட்டப்படவேண்டும்.

- 2 கூட்டங்களுக்கும் இடையில் 6 மாதங்களுக்குமிகாமல் இடைவெளி இருக்கும் வகையில் இருக்கவேண்டும்.

- பொதுவாக ஒவ்வோராண்டும் மூன்று கூட்டங்கள் நடைபெறும்

1. பட்ஜட் கூட்டத்தொடர் (FEB, MAY)
2. மழைக்காலக் கூட்டத்தொடர் ( JULY, SEP)
3. குளிர்காலக் கூட்டத்தொடர் (NOV, DEC)

tnpscexams.weebly.com